# ஈழத்து சித்தர்களின் பாடல் தொகுப்பு

தொகுத்தவர்
"தோழி"

நண்பர்களே,

தமிழகத்தில் சித்தர்களின் பாடல்கள் கிடைத்தவரையில் கிரமப் படுத்தி நூல்களாய் தொகுத்து இன்றைக்கு அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் பொதுவில் வைக்கப்பட்ட சூழல் அமைந்திருக்கிறது. அடுத்த கட்டமாக இந்த பாடல்களை முன் வைத்த விவாதங்களும், ஆய்வுகளும் கூட தொடர்ந்து நடைபெற்று வருவதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். சித்த மருத்துவம் முறைப் படுத்தப் பட்ட ஒரு நிறுவனமாகவும் தமிழகத்தில் சாத்தியமாகி இருப்பது மகிழ்ச்சியான ஒரு செய்தி.

ஆனால், இங்கே இலங்கையில் சித்தர்களின் பாடல்களைப் பொறுத்தவரையில் நாங்கள் நூற்றாண்டுகள் பின் தங்கியிருக்கிறோம் என்பதுதான் வேதனையான உண்மை. இந்த விஷயத்தில் அரசாங்கத்தின் பாராமுகம் ஒரு புறமென்றால், எமது சித்தர்களின் வழி வந்தவர்கள் தங்கள் குருநாதரின் படைப்புகளை முடக்கி வைத்திருப்பது இன்னொரு கொடுமை.

இன்றைக்கும், கொழும்பு மாநகரில் பலரிடம் இத்தகைய அரிய பாடல்களின் சுவடிகள் இருப்பதை நான் அறிவேன். அவர்கள் யாரும் அந்த பாடல்களை பார்வையிடக் கூட மற்றவர்களை அனுமதிப்பதில்லை. தங்கள் குருநாதர் விரும்பும் போது இந்த பாடல்கள் வெளியே வரும் என கூறுகின்றனர். அதில் எனக்கு உடன்பாடு உண்டென்றாலும், அதுவரையில் அந்த ஏட்டுச் சுவடிகளை அவர்கள் பத்திரமாய் பராமரித்திட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

இந்த மின் நூலில் நான் பகிர்ந்திருக்கும் இருபத்தி மூன்று பாடல்களும் எனது தனிப்பட்ட முயற்சி மற்றும் தேடுதலில் சேகரித்தவை. யாழ் குடா நாட்டில் உள்ள கோவிலொன்றில் இருக்கும் சுவடிகளில் இருந்து பிரதியெடுக்கப் பட்டவை. இந்த பாடல்களை அருளிய சித்தர்களின் பெயர்கள் கிடைக்கவில்லை.

காலத்தே மறைந்து கொண்டிருக்கும் எமது சித்தர்களின் பாடல்களில் சிறு துளியையாவது எனக்கு கிடைத்திட அருளிய எனது குருநாதரை வணங்கி இந்த நூலிலை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

என்றும் நட்புடன்

தோழி
www.siththarkal.com

உற்றபவந்தீர உறுதுணையாய்க் கொண்டிடுவர்
இற்றுவிழவே இருவினையாயெலாமெரிய இயற்றுவார்
பற்றுக் கோடாய்க் கொண்டு பதமாயெண்ணுவார்
கற்றுணர்வார் காமுறுவார் நின்னைந்தெழுத்தையே 1

வேதகீதர்வெண்ணீற்றர்தந்த மந்திரம் வவ்வவார்
ஓதத்தந்த நாவினால் எந்நேரமும் ஓதுவார்
நாதனாமம் என்றெண்ணி நைந்திடுவர்
காதலாய் கசிந்துணர்வார் நின்னைந்தெழுத்ததையே 2

நெக்குநெக்கு நினைந்தன்பாயுருகிடுவார்
தக்கமந்திரமாய் கொண்டெண்ணிடுவார்
ஒக்கவினையெலாந் தீர்த்திடும் என்றோதுவார்
சிக்கெனச் சிந்திப்பார் நின்னைந்தெழுத்தையே 3

இரவும் பகலும்எந்நேரமும் இச்சையாயெண்ணுவார்
வரவுபோக்கற்ற மந்திரமென்று வவ்வுவார்
சிரத்தையா யென்னேரமும் சிந்தையிசுமப்பார்
அரவமற்று அணைத்திடுவார் நின்னைந்தெழுத்தையே 4

நயம்பல வேண்டி நயம்படநண்ணுவார் நின்று
நியமமாய் நினைந்து நீள் கழலில் வாழுவார்
பயமெலாம் விலகிடப் பத்தியாய் பண்ணுவார்
முயன்றுநின்று மூழ்குவார் நின்னைந்தெழுத்தையே 5

அந்தரம் பாவந்தீரவே அங்கையி லெண்ணுவார்
குந்தகந் தீர்ந்திடுமென்று கோலமாய் கொள்வார்
சந்தமும் சகலமும்என்று சிந்தையில் சிந்திப்பார்
மந்திரமாய் பண்ணுவார் நின்னைந்தெழுத்தையே 6

வீடுவேண்டியே வீட்டுநெறியாய் கொள்ளுவார்
காடுபோகமுன் சுணக்கமின்றி கணக்கில் வைப்பார்
ஊடு நின்றாடவே உன்னியுன்னி உரைப்பார்
பீடுகொண்டு பிதற்றுவார் நின்னைந்தெழுத்தையே 7

அல்லல் தீர்ந்திடும் என்றங்கையில் எண்ணிடுவார்
நல்லவன் நாமம் என்று நாவினால் நவிற்றுவார்
எல்லையில் இன்பம் பயக்குமென்றெண்ணிடுவார்
செற்றுவாழ்வார் சிவனே நின்னைந்தெழுத்தையே 8

புணர்ந்து நிற்பர் போற்றிநிற்பர் என்றுமுன்னாமே
உணர்ந்து நிற்பர் உருகிநிற்பர் என்றுமுன்னாமே
புணர்ந்து நின்று வாழ்வதெல்லாம் உன்னாமமே
உணர்ந்து வாழ்வரென்றுமுன்னைந்தெழுத்தையே 9

பற்றுமர்றொன்றி பற்றுடன் பற்றிநிப்பார்
பெற்றபேறென பேணிப் பெற்றியனாவர்
கற்றுணர்கலை ஞானம்காதலாய்கண்டுணர்வர்
செற்றுவாழ்வர் சிவனை நினைத்தாலே 10

சிவாயிரெண்டு குருதேவரின் ஞானக்கண்களாகி
நயனதீட்சை செய்திட "ய" குருவிலடங்கிட
"நம" இரெண்டும் திருவடி தீட்சையாலொடுங்கும்
"சிவாயநம" என்னும் திவ்ய மந்திரத்தாலே 11

மருந்தார் இவர்என்றும் வானோர் பிணிதீர்ப்பார்
விருந்தார் இவர்வழுத்தி வழ்த்தும் அடியார்க்கு
திருத்தார் திண்மலர்த்தாள் போற்றவுந் தந்தார்
இருந்தார் எழில்சூழிடம் வீழிந்நிழ லதுதான் 12

தொழிலார் தொழுதொழுவார் துயர் தீர்ப்பார்
எழிலார் கொன்றைமலரா ரன்னிமேனி கொண்டார்
கொழிலார் அலைகொள்ளும் கோவளம் அமர்ந்தார்
எழிலார் நழுவாதிருந்தவிடம் வீழிந்நிழலதுதான் 13

மருவார் கொன்றைசூடும் அண்ணல்மண்மகிழ்ந்து
உருவார் கொண்டுவந்தார் பெரிதும் உளங்கொளத்
தருவார் தண்ணளிதான் தன்னடியார்க்கு தணிந்தென்னும்
திருவார் செல்வந்திகழுமிடம் வீழிந்நிழலதுதான் 14

ஆடல்பாடல்வல்ல மன்றுளாடியார்
கூடல் மாடக் கொண்டீச்சர நாதனார்
கோடலாய்க் கூடிய கோவளத்துறைக்
நின்றும் இருந்தும் போற்றி உய்மினே 15

திருவருட்டுணையாய் நின்றுனைத் தேடிட
குருவருடுணையாய் கூடும் குற்றாலமே
கருவிருட்டுறை கழிக்கும் கற்பகமே
திருப்பெருந்துறை செய்தனையே தரணியிலே 16

செய்தனை தரணியிலோர் பெருந்துறையே
எய்தினரெல்லாம் எகமாய் நின்னருள் பெறச்
செய்தனைச் செய்தியறிந்தாரெல்லாம்
எய்தினர் இணையிலா நின்பேரின்பமே 17

கருணையைக் கூறிக்கொண்டார் கலந்திடும்
அருநேசனே அடித்தோண்டிலாடிருள் செய்
அருணாசல அத்துவித சித்தாந்தம் வளர்க்க
கருணாசலமாய் காசினியில் காத்திருந்தமையே 18

எனைவளர்த்தனை எந்தையாய் தாயாகி நின்றே
உனைவளர்த்தனை ஊனினும் புகுந்தே
தினைத்தனை பொழுதும் பிரியாநின்றேன்
வினைக்கேடு செய்தவிண்ணவர்க்கரிய ஞானமே 19

கருணையைக் குறிக்கொண்டார் கலந்திடும்
அருணேசனே அடித்தோண்டிலாடிருள்செய்
அருணாசல அத்துவித சித்தாந்தம் வளர்க
கருணாலயமாய் காசினியில் காத்திருந்தனையே 20

எம்மானே எம்மானே என்றென்றேத்தி நின்றிடவே
வம்ம(மி)னோ என்றெனை யழைத்த வரை கயிலாயனே
அம்மனாய் அம்மனாய் அணைத்தெடுத்த அப்பனே
போம்மானே யுனைப் பேணுவதால் பூமியில் நான் வணங்கேனே

உற்றம்சுற்றம் விட்டு நின்னையே பற்றுச் செய்திடநான்
பற்றாகி யுள்ளே புகுந்துநின்ற பரமேட்டிபரிசுறவே
குற்றங் குணமெல்லாங் கொண்டனையாண்டகோவே
பெற்றமேறும் பெற்றியனேயுனையல்லால்பாரில் வணங்கேனே

அப்பார் சடையப்பன் ஒப்பார் சடையப்பன்
ஆலவாய் சடையப்பன்
ஒப்பார் குறுமுனிவன் ஒன்றிவாழ்ந்த காரை
தீபக் கோவளத்தை
ஒப்பார் சிவப்பெருந்துறையாக்கினானிது
கேண்மினிக் கலியில்
இப்பார் மண்டலத்தீர் இதையுணர்ந்து
அவான்கழல் போற்றவாரீரே 23